

வேலூர் மாவட்டம் காட்பாடி ஆரிமுத்து மோட்டூரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. பேசினார். அருகில் மேற்கு ஒன்றிய கழகசெயலாளர் எஸ்.தணிகாசலம், தலைமைக் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, முகமது சபீர், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், ஒன்றிய துணை செயலாளர் கே.எஸ். கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி தலைமைக் கழக பேச்சாளர்கள் ராஜகம்பீரன் அப்பாஸ், கு.விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டு கண்டன உரை நிகழ்த்தினார்கள். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் ம.முத்தமிழ்ச்செல்வி, கே.பி.ஆர்.ஜோதிராஜன், ம.அன்பழகன், க.உமாகன்ரங்கம், கே.சதிஷ்குமார், கே.ஆர்.திருப்பதி, டி.அசோக்குமார், எஸ்.உமாசந்திரன், சத்தியநாராயணன், தே.பிரபாகரன், மு.க.அருள்நிதி, எஸ்.மேகநாதன், மு.ரகுபதி, ஆர்.சுதா, காவியாவிக்டர், வி.வி.கிரிராஜ், சி.செந்தில்குமார், நா.பெ.பிரபு மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டார்கள்.

# முதல்வர் பிறந்தநாள் விழா: தொல்.திருமாவளவன் பேச்சு!

9-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏற்படுத்தியது திராவிட முன்னேற்றக் கழகம் – பேரறிஞர் அண்ணா – அவருடைய தளபதிகள் வழி நடத்திய படை. அதனால்தான், வரலாறு அவர்களைப் பேசுகிறது.

ஆனால், அவர் தமிழருக்கும் – தமிழ்நாட்டிற்கும் – தமிழ்த் தேசிய அரசியலுக்கும் எதிரானவர் என்பதைப் போன்று ஒரு தோற்றத்தை சிலர் உருவாக்குகிறார்கள்.

என்னுடைய 35 ஆண்டு கால பொது வாழ்வில், தமிழ்நாட்டு அரசியலில் ஒன்றை புரிந்து கொண்டேன். எந்த ஆதாரமும் இல்லாமல் கலைஞரை எதிர்ப்பதை மட்டுமே கொள்கையாகக் கொண்டு செயல்படக் கூடியவர்கள் இங்கே ஏராளம்இருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு எந்த கொள்கையும் கிடையாது. தி.மு.க. எதிர்ப்பு என்பதை விட, கலைஞர் எதிர்ப்பு என்பதுதான் இங்கே முக்கியமான அரசியலாக இருக்கிறது. இதை நான் மேடைக்காக பேசவில்லை. நான் உணர்ந்து பேசுகிறேன். அவர் மீது அப்படி ஒரு வெறுப்பு; அப்படி ஒரு எதிர்ப்பு. எல்லாவற்றையும் தாண்டி நிமிர்ந்து நின்றவர்; ஐந்து முறை இந்த நாட்டின் முதலமைச்சராக நாற்காலியில் அமர்ந்தவர்.

**குமரியில் வள்ளுவர் சிலை! கலைஞரின் சாதுர்யம்!**

முத்தமிழறிஞர் கலைஞர் எவ்வளவு சாதுரியமானவர்… விவேகானந்தர் பாறை என்று கன்னியாகுமரியில் இருக்கிற பாறையை சனாதன சக்திகள் எல்லாம் சொல்லி பெருமைப்பட்டபோது, அந்தப் பாறையின்பெயரை மாற்றுவேன் என்று சொல்லவில்லை. கலைஞரின் சாதுரியம் அங்கேதான் இருக்கிறது. அந்தப் பாறை இருக்கிற இடத்தில், வள்ளுவனுக்கு சிலை எழுப்பி, இது திருவள்ளுவனுக்குரிய இடம்; விவேகானந்தருக்குரிய இடம் இல்லை. இது ஆரியர்கள் பெருமைப்படும் பாறை அல்ல; திராவிடர்கள் பெருமைப்படும் – தமிழர்கள் பெருமைப்படும் இடம் என்று சாதித்துக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதுதான் அவருடைய அரசியல் சாதுரியம்.

**சிம்சன் அருகே பெரியாருக்கு சிலை ஏன்?**

‘மவுண்ட் ரோடு மகாவிஷ்ணு’ என்று ‘இந்து’ பத்திரிகை அழைப்பார்கள். இந்த அண்ணா சாலையில்,‘இந்து’ பத்திரிகை; பக்கத்தில் ‘தினமணி’– இது எல்லாம் பார்ப்பன சமூகத்தவரின் இதழ்கள் என்பது நமக்குத் தெரியும். மறந்தும் திராவிட இயக்கங்களை அவர்கள் பாராட்டியதில்லை. பெரியாரையோ – பேரறிஞர் அண்ணாவையோ – கலைஞரையோ. ஒருநாளும் ஆதரவாக அவர்கள் பேசிய வரலாறு கிடையாது.

அப்படிப்பட்ட அந்த இடத்தில், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருக்கு சிலை எழுப்பி, இது பெரியாருடைய மண் – பெரியாருடைய மையம் என்று அந்த இடத்தில் சிலை எழுப்பியவர். இந்து பத்திரிகையை அங்கிருந்த அப்புறப்படுத்துவோம் என்று போராடவில்லை. அந்த இடத்தில் பெரியாருக்கு சிலை வைப்போம் என்று சிம்சன் அருகே பெரியாருக்கு சிலை வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

நம்முடைய கொள்கைப் பகைவர்களை,அவர்எப்படிஎதிர்கொண்டார்? எப்படி அவர்களை வீழ்த்தினார்? கலைஞருக்கு நிகர் கலைஞர்தான்.அதுதான் அவருடைய அரசியல்; அதுதான் அவருடைய கொள்கைப் பார்வை; கொள்கைத் தெளிவு.

**சேது சமுத்திரத் திட்டம்!**

ராமர் பாலம் என்று எல்லோரும் பேசியபோது, அவர் பெரியாருக்கே உள்ள நகைச்சுவை பாணியில் சொன்னார்,‘அந்த ராமர் பாலத்தை கட்டினார் என்பது உண்மை என்றால், அவர் எந்த பொறியியல் கல்லூரியில் படித்தார்’ என்று கேட்டார். இது யாரையும் காயப்படுத்துவதற்காக அல்ல, சிந்திப்பதற்காக. ராமர் இருந்தாரா? இல்லையா? என்பது அல்ல பிரச்சினை. அதை அவர் விமர்சிக்கவில்லை. தேர்தல் அரசியலில் இருந்தாலும் கூட, பகுத்தறிவோடு இயங்க வேண்டும். எத்தனை ஆயிரம் கோடி கொட்டப்பட்டு, அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது. அங்கே இராமர் கட்டிய பாலத்தை சேதப்படுத்தக் கூடாது என்ற ஒரு காரணம் சொல்லி,சேது கால்வாய் திட்டம்நிறுத்தப்பட்டுவிட்டது. சோனியா காந்தி அம்மையாரை அழைத்து வந்து, அந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். ஆயிரம் கோடிக்கு மேல் செலவு செய்த பின்னர் அந்தத் திட்டம் நிறுத்தப்பட்ட போது, அதற்கு அவர்கள் சொன்ன காரணம், அந்தப் பாலத்தை ராமர் கட்டினார். அதனால் சேதப்படுத்தக் கூடாது என்று சொன்ன போதுதான், தன்னுடைய எதிர்ப்பை இப்படி பதிவு செய்தார்.

முத்தமிழறிஞர் கலைஞருடைய அந்த சாதுரியம், இன்றைக்கு அவருடைய கருத்தியல் வாரிசாகவும் களத்தில் நிற்கிற அண்ணன் தளபதி ஸ்டாலின் அவர்களிடத்தில் வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது. கொஞ்சமும் சமரசம் செய்து கொள்ளாமல், அவர்களின் கைகளில் அமலாக்கத்துறை இருக்கிறது; அவர்களின் கைகளில் சி.பி.ஐ. இருக்கிறது; அவர்களின் கைகளில் வருமானவரித்துறை இருக்கிறது. அவற்றையெல்லாம் ஏவுவார்கள்; அவற்றைக் கொண்டு அச்சுறுத்துவார்கள்; கிடுக்கிப்பிடி போடுவார்கள்; நெருக்கடியைத் தருவார்கள். எனவே, நாம் சற்று நெளிந்து வளைந்துதான் செல்ல வேண்டும்என்று எண்ணவில்லை.

உன் அச்சுறுத்தலுக்கு ஒரு போதும் பணிய மாட்டோம் என்று வெளிப்படையாக சொல்லும் துணிச்சலை – நீ பணத்தை தராமல் நிறுத்தி வைத்தாலும், நாங்கள் அந்த மும்மொழிக் கொள்கைத் திட்டத்திற்கு உடன்பட மாட்டோம்; கையெழுத்திட மாட்டோம்; ஏற்றுக்கொள்ள மாட்டோம்; தேசிய கல்விக் கொள்கையை நாங்கள் ஏற்க மாட்டோம்.

எனதருமைத் தோழர்களே… அண்ணன் தளபதி அவர்களோடு ஏன் நாங்கள் கைகோர்த்து நிற்கிறோம் என்பதற்கு, இவருடைய கொள்கை உறுதிதான் என்பதைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தொல்.திருமாவளவன் எம்.பி. பேசினார்.

---

## விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில்

# கூட்டேரிப்பட்டில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம் !

## ஆரணி எம்.பி. எம்.எஸ்.தரணிவேந்தன் சிறப்புரை!

மைலம், மார்ச் 17-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி மயிலம் சட்டமன்ற தொகுதிசார்பில் மும்மொழி கொள்கை மூலம் தமிழ்நாட்டில் இந்தி திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் கூட்டேரிப்பட்டு கலைஞர் திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் விஜயகுமார் தலைமை தாங்கினார்

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அண்ணாமலை அனைவரையும் வரவேற்றார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.கே.பி. ரமேஷ், உதயகுமார், எம்.டி. பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் அப்பாஸ், அப்துல் வாஹாப் அதாயி,

மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தரணிவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசை கண்டித்து கண்டன உரை நிகழ்த்தினர்.

அப்போது கூட்டத்தில் பேசிய ஆரணி எம்.பி. எம்.எஸ்.தரணிவேந்தன் பாராளுமன்றத்தில் மோடியால் பேச முடியவில்லை.

அதிமுகவினர் கேட்கின்றனர் பாராளுமன்றத்தில் திமுக எம்.பி.க்கள் என்ன செய்கின்றனர் என்று தமிழ்நாட்டைச் சேர்ந்த 40 எம்பிக்களும் பாராளுமன்றத்தில் மோடிக்கு 18 முறை தண்ணி காண்பித்துள்ளோம். பத்தாண்டுகளாக கோலாட்சி கொண்டிருந்த மோடி இன்று ஆடி போய் இருக்கிறார் பாராளுமன்றத்திற்கு மோடி வருவதே இல்லாத நிலைமைஉருவாக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் தமிழர்களையும் தமிழ்நாட்டு மக்களையும் கொச்சைப்படுத்தி பேசிய மத்திய அமைச்சர் மன்னிப்பு கேட்க வைத்தது தமிழ்நாட்டைச் சேர்ந்த 40 தி.மு.க. எம்பிகள் தான் என ஆரணி எம்.பி. எம்.எஸ்.தரணிவேந்தன் தெரிவித்தார்.

முன்னதாக மும்மொழி கொள்கை மூலம் தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்தும் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற உறுதிமொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மாவட்ட சிறுபான்மையினர் நல பிரிவு அணி அமைப்பாளர் அன்சாரி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் செந்தில்குமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் சம்சுதீன், ரமேஷ், தமிழ்வாணன், செந்தமிழ்ச்செல்வன், ராஜ், ஜெயப்பிரகாஷ் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மயிலம் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வெற்றிச்செல்வன் நன்றி கூறினார்.



வானூர் சட்டமன்ற தொகுதி, கோட்டக்குப்பம், சின்னக்கோட்டக்குப்பம், ஆலடியம்மன் கோவில் அருகில், நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ், எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி, பி.டி.கே.முரளி, இரா.மைதிலி ராஜேந்திரன், கே.எஸ்.ராஜி, ஆர்.எஸ்.வாசன், உஷா பி.டி.கே.முரளி உள்ளிட்ட கழக தோழர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

## தென்காசி மாவட்டத்தில் மாவட்ட வளர்ச்சி

# ஒருங்கிணைப்பு - கண்காணிப்புக்குழுக் கூட்டம்!

## மரு.ராணி ஸ்ரீகுமார் எம்.பி. தலைமை! மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் முன்னிலை!

தென்காசி, மார்ச் 18 -

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், 15.03.2025 அன்று அரசு மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து, மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம், (DISHA COMMITTEE) தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் DISHA குழு தலைவருமான மரு.ராணிஸ்ரீகுமார் தலைமையில்,தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் தெரிவித்தாவது.

இந்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தேசிய சுகாதார திட்டம், தீன தயாள் உபாத்தியாய கிராம மின்வசதி திட்டம், பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம், தூய்மை பாரத இயக்கம், தேசிய ஊரக குடிநீர் திட்டம்,மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை திட்டம்,தேசிய சமூக உதவித் திட்டங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள்,தேசிய நில ஆவணங்கள் கணினி மயமாக்கல் திட்டம்,பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்,தேசிய நெடுஞ்சாலை திட்டம்,தேசிய மின் ஆளுமைத் திட்டம்,மாவட்ட முன்னோடி வங்கி, மாவட்டத் தொழில்மையம்,பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம், ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம்,ஜல் ஜீவன் மிஷன், வேளாண்மைத்துறை, வனத்துறை, மருத்துவத் துறை,பிரதம மந்திரி கிராம முன்னேற்ற திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாவட்டத்தில் செயல்படுத்தி வரும் திட்டங்கள் அனைத்தும் மக்கள் நலன் கருதி விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும்.மேலும் மக்களின் தேவைகளை அறிந்து அவர்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்து அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்த வேண்டும். அனைத்தும் சிறந்த முறையில் செயல்படுத்தி பொதுமக்களுக்கு முழுமையாக சென்றடையும் விதத்தில் அரசு அலுவலர்கள் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். இக்கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் அகில் தம்பி,மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ,செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சித் துறை) ஏழிசைச் செல்வி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் உதயகிருஷ்ணன், தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஷேக் அப்துல்லா மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை கே.டி. கூடலரசன்

**மார்ச் 18 (1999)**



**பள்ளிப் பருவத்திலேயே தி.மு.கழகப் பேச்சாளராக விளங்கியவர்.**

**இவர் அரசுப் பணியில் இருந்துகொண்டே கழகப் பிரச்சாரத்தை மேற்கொண்டதால், அன்றைய அரசால் அரசுப் பணியிலிருந்து நீக்கப்பட்டவர். அப்படி நீக்கிய பின்னரும், அதற்காக வருந்தாது, மேலும் எழுச்சியுடன் கழக மேடைகள் தோறும் கொள்கை முரசம் செய்தவர்.**

**முரசொலி உள்ளிட்ட பல பத்திரிகைகளில் கட்டுரை எழுதி பெயர் பெற்றவர்.**

**தொ.மு.ச. அமைப்பில் பல்வேறு பொறுப்புகளை வகித்து, தொழிலாளர்களின் நலன் காக்க பாடுபட்ட இவர், சாலை விபத்தில் மரணமடைந்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**